# குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறைகள் - தாள் – II

## சமூக, மனவெழுச்சி மற்றும் ஒழுக்க வளர்ச்சி - Social, Emotional and Moral Development

**சமூக வளர்ச்சி:**

* ஒருவர் மற்றவர்களுடன் கொண்டிருக்கும் உறவுகளே சமூக வளர்ச்சி எனப்படும்.

* சமூகத் தொடர்புகளில் முதிர்ச்சி பெறுதலே - சமூக வளர்ச்சி - ஹர்லாக்

* குழந்தைகளிடம், சமூகவியல்பு வளர்ச்சியை ஏற்படுத்துதல் - சமூக நெறிப்படுத்தும் செயல்முறை

* குழந்தை பிறக்கும் போது மிருக சிகிச்சையுடன் இருக்கும்.

* மனிதர்களுக்கு மட்டுமே உள்ள வளர்ச்சிகள்: 1. சமூகவியல்பு வளர்ச்சி 2. ஒழுக்க வளர்ச்சி

* சமூக வளர்ச்சியின் இரண்டு கூறுகள்: 1. சமூக உணர்வு பெற்றுத் திகழ்தல் 2. சமூகச் செயல்களில் பொறுப்புடன் பங்கேற்றல்

* சமூக வளர்ச்சி என்பது தம் பணிபுகளை ஏற்று தன்னைச்சுற்றி வாழும் பிறருடன் இணங்கிப் போக வளரும் குழந்தைகள் பெறும் பயிற்சியின் விளைவு ஆகும்.

* சமூக வளர்ச்சி, சமூகவியல் பின்னாதல் (Socialization) எதை பொறுத்து அமையும்? - குழந்தைகளின் மனஎழுச்சி வளர்ச்சியை பொறுத்தது.

* சமூக கற்றல் கொள்கை - ஆல்பிரட் பாண்டுரா (பின்பற்றி கற்றல்)

* சமூக வளர்ச்சியானது வயதின் அடிப்படையில் பல படிநிலையில் அமைகிறது.

* சமூக வளர்ச்சி வளரும் சூழல், ஏற்படும் அனுபவங்களை பொறுத்தது.

* சமூக வளர்ச்சியில் தான் என்ற உணர்வு - ஒரு வயது குழந்தை

* குழந்தை பருவம் (0 - 4) - பயம் போன்ற உணர்வுகள் இருக்காது.

* பிறந்த குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சி அதன் உடல் தேவைகளைப் பொறுத்து தான் அமையும்.

* தான் சார்ந்த சமுதாயம் ஒத்துக் கொள்ள கூடிய நம்பிக்கைகள், மதிப்புகள், நடத்தைகள் போன்றவற்றை பெற்று சமுதாயத்தோடு இயைந்து வாழக் கற்றலே - சமூகவியல்

பின்னாதல் (அ) சமூகவியல்பினைப் பெறுதல் எனப்படும்.

* சமூக வளர்ச்சி - பள்ளிக் சூழலை (சமுதாயம்) பொறுத்தே அமைகிறது.

* பெற்றோரை முழுவதும் சார்ந்த பருவம் - குழவிப்பருவம்.

* கூட்டாளிக்குழுப் பருவம் (Gang Age) - பிள்ளைப் பருவம்

* சிறு குழந்தைகளின் சமூக வளர்ச்சி எழற்றுடன் தொடர்புடையது? 1. உடல் வளர்ச்சி 2. அறிவு வளர்ச்சி

* எரிக்சனின் - சமூகவியல்பு வளர்ச்சிப் படிநிலைகள் - எட்டு

* ஒழுக்க வளர்ச்சி நிலை - கோல்பர்க்

* ஹர்லாக் - 10 வளர்ச்சி நிலைகள்

* சமூக முதிர்ச்சிக்கான அடையாளம் - தலைமைப்பண்பு

* ஆற்றல்மிக்க சமூக நிறுவனமே - பள்ளி

*** எரிக்சனின் 8 வளர்ச்சி நிலைகள்:**

**சமூக வளர்ச்சி நிலை - சமூகச் செல்வாக்குகள் - பிரச்சனைகள்**

1. குழவிப்பருவம்(0-1) - தாய், செவிலியர் - நம்பிக்கை (அ) நம்பிக்கையின்மை

2. குழந்தைப் பருவம்(1-3) - பெற்றோர் - சுதந்திரமாக இயங்குதல், ஐயப்பாடு

3. விளையாட்டுப் பருவம்(3-5) - ஆதாரக்குடும்பம் - தானே முற்பட்டு செயலாற்றல், குற்ற உணர்வு

4. பள்ளிப் பருவம்(6-12) - சுற்றுப்புறம், பள்ளி - உற்சாக உழைத்தல் (அ) தாழ்வு மனப்பான்மை

5.குமரப்பருவம் - ஒப்பார் குழு, பிற குழுக்கள் விரும்பும் தன்மை - தன்னைப்பற்றிய நிலையான கருத்து (அ) தெளிவற்ற குழப்பமான கருத்து

6. முன் முதிர்பருவம் (20-30) - நண்பர்கள், பால் தொடர்பு உறுப்பினர்கள் - நெருக்கமான உறவும், ஒருமைப்பாட்டு உணர்வுகள்(அ) தனிப்பட்ட நிலை

7. நடுமுதிர்பருவம் (30-60) - பொறுப்புகள், குடும்ப கடமைகளை பகிர்ந்து கொள்வோர் - தன்னுள் ஒடுங்கிச் செயல்படுதல்

8. பின்முதிர் பருவம் - மனித இனம், நம் இனம் - நேர்மை, முழுமையான நம்பிக்கை இழப்பு

* சமூக வளர்ச்சி, சமூகவியல்பினை அடைதல் ஆகியவற்றின் இறுதி இலக்கு - சமூக முதிர்ச்சி.

* குழந்தைகளின் சமூக, மனவெழுச்சியை பாதிக்கும் காரணிகள்:

1. நேரடியான காரணிகள் - (i) மரபணுக் குறைபாடுகள், (ii) சரியான கவனிப்பின்மை

2. மறைமுக காரணிகள் - (i). ஒத்த வயதினரோடு பழகும் வாய்ப்பு மறுக்கப்படுதல். (ii). ஒரு குழந்தை குடும்பத்தில் எத்தனையாவது இடத்தில் உள்ளது.

(iii). கலாச்சார மாறுபாடு. (iv). குறைவான, தாமதமாகும் மொழி வளர்ச்சி.

**சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சிக்கு உதவும் காரணிகள்**

1. அன்பு, அரவணைப்பும். 2.பாதுகாப்புணர்வு 3. பிற குழந்தைகளோடு ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு.

**மனவெழுச்சி வளர்ச்சி - Emotional Development**

* மன உணர்வுகள் மேலோங்கி நிற்கும் நிளையே - மனவெழுச்சி

* நெருக்கமான சூழலில் மன உணர்வுகள் மேலோங்கி நிற்கும் நிலையே மனவெழுச்சி என்று கூறியவர் - ஸ்பிட்ஸ்.

* உடலையும், மனத்தையும் கிளர்ச்சி அடையச் செய்யும் நிலையை மனவெழுச்சி என்றவர் - பிரட்ஜஸ்

* பொதுப்படையான உள்ளக் கிளர்ச்சி - மகிழ்ச்சி, துயரம்

* முதன்மை (அ) அடிப்படை மனஎழுச்சிகள்

* சினம், வருத்தம், மகிழ்ச்சி, ஆச்சரியம், பயம், தாழ்வுணர்ச்சி

* பிறப்பிலேயே கட்டமைக்கபட்டவை அடிப்படை, முதன்மை மனவெழுச்சி

* இரண்டாம் நிளை (அ) சிக்கலான மனவெழுச்சி

* குமரப்பருவத்தில் குழப்பம், கூச்சம், பொறாமை, தற்பெருமை, குற்ற உணர்வு

* அச்சம் - பிறவியிலிருந்து தோன்றக்கூடிய ஒரு மனவெழுச்சி ஆகும்.

* சிக்கலான மனவெழுச்சி - பொறாமை

* பொறாமையில் ஒரளவு அச்சமும், சினமும் அடங்கியுள்ளன.

* பொறாமை - குழந்தை பிறந்து ஒரிரு ஆண்டுகள் வளர்ச்சியுற்ற பின்னரே எழுகிறது.

* கூச்சம் (அ) நாணம் - தாழ்வுச் சிக்கலைக் காட்டுகிறது.

* மனவெழுச்சி வளர்ச்சிக்கு அடிப்படையான இரண்டு காரணிகள் - 1. கற்றல் 2. முதிர்ச்சி

* பிள்ளைப் பருவத்தில் அதிகமாக இருக்கும் மனவெழுச்சி - அச்சம் (அ) பயம்

* அச்சத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்தவர் - லோடன்

* மனவெழுச்சிகளில் முக்கியமானது - கோபம்

* குழந்தைகள் எந்த நேரத்தில் கோபம் கொள்கின்றனர் என்ற ஆய்வு - ரிக்கெட்ஸ்

* சந்தோஷமற்ற மனவெழுச்சி - பொறாமை

* மனித மனவெழுச்சிகள் இயல்பூக்கங்களிலிருந்து உருவாகுபவை என்றவர் - மக்டூகல்

* இயல்பூக்க நடத்தையின் மூன்று கூறுகள் - 1. அறிவு 2. உணர்வு 3. உடலியக்கம்

* மனவெழுச்சிகள் எப்போது உருவாக செயல்படும்? - அடிப்படை தேவை நிறைவேறும் போது (அ) இடர்களால் தடைப்படும் போது

எர்க்ஸ் - பிட்சன் விதி

* குறிப்பிட்ட ஓர் எல்லை வரை மனவெழுச்சி அதிகரித்தல், சாதனையைத் தூண்டி அதிகரிக்கச் செய்யும், அதற்கு மேல் அது சாதனையில் குறுக்கிடும்.

* ஒர் மனவெழுச்சி எழுவதற்கான காரணம் மறைந்த பின்னரும் தொடர்ந்து செயற்படுவது - மனவெழுச்சி நீட்சி

* மனவெழுச்சிகள் மூன்று பரிமாணங்களில் பரவி காணப்படுகின்றன என்றவர் - ஹெரால்டு ஷால்ஸ்பர்க்

*** இன்று மனவெழுச்சியில் 4 பரிமாணங்கள்:**

1. மகிழ்ச்சி - மகிழ்ச்சியின்மை

2. கவனித்தல் - புறக்கணித்தல்

3. செயலூறு நிலை - செயலற்ற நிலை

4. எளிமை - சிக்கல்

* மனவெழுச்சி - இருமுனைகள் (Bipolar) கொண்டது.

* புலன் உணர்ச்சிகளால் தூண்டப்படும் மனவெழுச்சிகள் - வலி, அருவருப்பு, உற்சாகம்

* தற்கருத்து, அவாநிலையுடன் இணைந்த மனவெழுச்சிகள் - பெருமிதம், அவமானம், குற்ற உணர்வு.

* அன்பு, பொறாமை, பரிதாபம் - பிறரைச் சார்ந்து எழும் மனவெழுச்சிகள்.

* பாராட்டுத் தொடர்பான மனவெழுச்சிகள் - ஆச்சரியம், மரியாதை

* சினம், அச்சம், அன்பு என்னும் மூன்றே அடிப்படை மனவெழுச்சிகள் என்றவர் - வாட்சன்

* பிறந்த குழந்தையிடம் காணப்படுவது - பொதுப்படையான உள்ளக்கிளர்ச்சி என்றவர் - பிரஜட்ஸ்

* மகிழ்ச்சி தரக்கூடிய மனவெழுச்சிகள் மனநலம் மேம்படும் உடன்பாடு மனவெழுச்சிகள்

* மகிழ்ச்சியற்ற நிலையை உண்டாக்கும் மனவெழுச்சிகள் - எதிர்ப்பு மனவெழுச்சி

* மனவெழுச்சிகளைப் பயன்படுத்துதல் யாருடைய கடமை - பெற்றோர் மற்றும் ஆசிரியர்.

* எதிர்ப்பு மனவெழுச்சி எல்லோரிடமும் இருக்கிறது. இவையின்றி வாழ்க்கை சுவையாக இருக்காது.

* மாணாக்கரது மனவெழுச்சி வளர்ச்சியால் பெரும் பங்கு வகுக்கும் காரணிகள்:

* தனிநபர் காரணிகள் - 1. உடல் வளர்ச்சி 2. உடல் நலம் 3. நுண்ணறிவு

* சமூகக் கராணிகள் - 1. குடும்பம் 2. பள்ளி

* மனித செயல்களை ஊக்குவிக்கும் காரணி - மனவெழுச்சி

www.Padasalai.Net

* இலக்கியத்திறன், நுண்கலைத்திறன் எவற்றால் நிகழும் - மனவெழுச்சி

* ஒருவன் ஒரு செயலை செய்து முடிக்கத் தேவைப்படும் துணிவு, சக்தியை தருபவை - மனவெழுச்சிகள்

* சமூக நல்வாழ்விற்கு அடிப்படை - மனவெழுச்சிகள்

* உடன்பாட்டு மனவெழுச்சிகள் - மகிழ்ச்சி, உற்சாகம், பரிவு, களிப்பு

* எதிர்ப்பு மனவெழுச்சிகள் - சினம், அருவருப்பு, அச்சம், துயரம், பொறாமை

* மனவெழுச்சி வெளிப்படும் முறையில் முக்கிய பங்கு வகிப்பவை - பின்பற்றல் (imitation)

* மனவெழுச்சி வெளிப்பாடு சமுதாயத்திற்கு சமுதாயம் வேறுபடும் என்றவர் - மார்க்ரெட் மீட்

* குழவிப்பருவம், முன்பிள்ளைப்பருவம், மனவெழுச்சிகளில் இருமுகப் போக்குநிலை தோன்றுகிறது என்றவர் - ஃப்ராய்டு

* மனவெழுச்சி நுண்ணறிவு என்ற கருத்தை பிரபலப்படுத்தியவர்கள் - ஜாக்மேயர், பீட்டர் ஸலோவே.

* மனவெழுச்சி நுண்ணறிவு - சமூக நுண்ணறிவின் உள் அங்கம்

* மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகள் - 4

1. மனவெழுச்சியினை உணர்தல் மற்றும் வெளிப்படுத்துதல்

2. மனவெழுச்சியினை சிந்தனையில் பயன்படுத்துதல்

3. மனவெழுச்சிகளைப் புரிந்து கொண்டு பகுத்தாய்தல்

4. மனவெழுச்சிகளை நெறிப்படுத்தி சுய முன்னேற்றத்துக்கு வழி வகுத்தல்.

**ஒழுக்க வளர்ச்சி - Moral Development**

* சமூக அறவெறிகளை அறிந்து அதன்படி ஒட்ட ஒழுகல் ஒழுக்க வளர்ச்சி எனப்படும்.

* நன்னெறிச் சிந்தனை (Moral) - மோர்ஸ் என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.

* நீதி சார்ந்த வளர்ச்சி (அ) ஒழுக்க வளர்ச்சி

* கோல்பர்க் படிநிலைகள் - Kohlberg's Stages of Moral Development

* சுமார் 11-12 வயதில் ஒழுக்கம் பற்றிய சார்பு நோக்கத்தை (நடத்தையை அதன்பின் அமைந்திருக்கும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மதிப்பிடுதல்) இவர்கள் அடைகிறார்கள்

* 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள், தங்களது உணர்ச்சிகள், தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் பிறரது நடத்தைகளை மதிப்பிடுவர்.

தம்மை பிறர் நிலையில் வைத்துப் பார்க்கும் திறனின்று செயல்படுவர்.

* 12 வயதிற்கு மேற்பட்ட நிலையில் சமரசப் போக்கு, மன்னிக்கும் பண்பு போன்றவை அதிகயளவில் காணப்படும்.

கோல்பர்க் என்பவரது விளக்கம் பியாஜேவின் கருத்துக்களுடன் தொடர்பு கொண்டதாகும்.

* குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் மூன்று நிலைகளை கூறியவர் - கோல்பர்க்

1. மரபுக்கு முற்பட்ட நிலை - மகிழ்ச்சி பெறுதல், தண்டணையை தவிர்த்தல்

2. மரபு நிலை - மனித பாராட்டு பெற

3. மரபுக்கு பிந்திய நிலை

* ஒவ்வொன்றிலும் இரண்டு நிலைப்பகுதிகள். மொத்தம் 6 நிலைப்பகுதிகள்.

* அறிவு வளர்ச்சியில் பியாஜே குறிப்பிடும் செயல்களான தன்வயப்படுதல், பொருந்திப்போதல் ஆகிய இரண்டும் ஒழுக்க வளர்ச்சியுலம் காணப்படுவதாக கூறியவர் - கோல்பர்க்.

* ஒழுக்கம் பற்றிய இயல்பான நோக்கம், சார்பு நோக்கம் பற்றி கூறியவர் - பியாஜே

* ஒழுக்கம் வளர்ச்சியில் நான்கு நிலைகள் - 1. பட்டறி நிலை 2. ஆதிக்க நிலை (அ) ஆளப்படு நிலை 3. சமூக நிலை 4. தனித்த நிலை

* ஒழுக்க வளர்ச்சிக்கும், முதிர்ச்சி பெறுதலுக்கும் தொடர்பு உண்டு என்றவர் - கோல்பர்க், பியாஜே

* மாணாக்கரிடம் நல்லொழுக்கம் வளர்ச்சியுற - அறநெறிப்போதனை

* ஒழுக்கத்தின் அடிப்படை - தற்கருத்து

* தற்கருத்து என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் - லெக்கி

* தன்னைப் பற்றி ஒருவன் கொண்டுள்ள மனப்பான்மைகள், உணர்ச்சிகள் போன்றவற்றின் தொகுப்பே - தற்கருத்து

* பாராட்டு, கண்டிபதன் மூலம் மறைமுகமாக ஒழுக்க பயிற்சிகளை பள்ளிகள் அளிக்கின்றன.

* வாழ்க்கை தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தலில் தற்கருத்து முக்கிய செல்வாக்குப் பெற்று உள்ளது என்றவர் - டொனால்டு சூப்பர்

* நன்னெறிச் சிந்தனை வளர்ச்சியில் 4 நிலைகள் உள்ளன என்றவர் - பியாஜே

* தன்னிச்சை நிலை (0-5)

* வேறுபட்ட நிலை - ஆதிக்க நிலை (5-8)

* வேறுபட்ட நிலை - மாற்றிக் கொள்ளும் நிலை (8-13)

* தன்னாட்சி நிலை (அ) சமன்நிலை - குமரப்பருவம் (13-18 ஆண்டு)

* குழந்தை பிறந்து நான்கு மாதம் வரை அதன் மனவெழுச்சி உடல் தேவையை பொறுத்தே அமையும்.

* மனவெழுச்சி முதிர்ச்சி - தனக்கும், பிறருக்கும் மனநிறைவை ஏற்படுத்துவது.

www.Padasalai.Net

* மனவெழுச்சி நுண்ணறிவு - தன் மற்றும் பிறர் உணர்வுகள், மனவெழுச்சிகளை கண்டறிந்து முறைப்படுத்தும் அறிவு, தற்செயல்களை நெறிப்படுத்திக் கொள்ளும் ஆற்றல்.

* ஒழுக்கம் பற்றி முழுமையாக அறிய முயற்சிக்கும் வயது 11 - 12 வயது.

* 1. அறிவு வளர்ச்சி - பியாஜே. 2 உடல் வளர்ச்சி - ஹர்லாக 3. சமூக வளர்ச்சி - எரிக்சன் 4. ஒழுக்க ஒழுக்க வளர்ச்சி - கோல்பர்க்

* ஆளுமை (Personality) என்ற சொல் பெர்சோனா(Persona) என்னும் இலத்தீன் மொழிச்சொல்லிருந்து பிறந்ததாகும்.

* பெர்சோனா என்பது முகமூடி(Mask). கிரேக்க நாடக மேடையில் கதை மாந்தர்கள் முகமூடி அணிந்து நடிப்பர்.

* ஆளுமை என்பது ஒருவர் பெற்றுள்ள உடற்பண்புகள், மனப்பண்புகள், சமூக அறநெறிப்பண்புகள், மனப்பான்மைகள் போன்ற எல்லா பண்புகளும் இணைந்த முழுமையான கலவை.

**ஆளுமை வரையறைகள் - Definitions**

* ஆல்போர்ட் - ஒருவரிடம் அவருக்கே உரிய சூழ்நிலைக்கேற்ற பொருத்தப்பாட்டினைத் தீர்மானிக்கின்ற அவருடைய உடல், உள்ளம் சார்ந்த அமைப்புகளின் செயல்படும்

ஒருங்கினைப்பு அவரது ஆளுமை.

* கில்போர்டு - ஒருவரது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு ஆளுமை எனப்படும்.

* கேட்டல் - மனிதர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்வார்கள் என்பதை முன்கூட்டியே அறிய உதவுவது ஆளுமை என்ப்படும்.

* கெம்ப் - மனிதர்கள் தம் சூழ்நிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொண்ட பொருத்தபாடு.

* வாட்சன் - ஆளுமை என்பது நம்பத்தகுந்த செய்திகளை நீண்டதொரு காலத்திற்கு உற்று நோக்கல் வழியே காணக்கூடிய செயல்களின் கூட்டுத்தொகுப்பே என்று கூறுகிறார்.

* ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணிகள் - Major Determinats of Personality

* உயிரியல் காரணிகள்: 1. உடல் சார்ந்த பண்புகள் 2. நாளமில்லா சுரப்பிகள் 3.நரம்பு மண்டலம்

* சமூகவியல் காரணிகள்: 1. வீடு 2. பள்ளி 3. பண்பாடு 4. மொழி

* உளவியல் காரணிகள்: 1. நுண்ணறிவு 2. ஊக்கம் 3. மனவெழுச்சி 4. மனப்பான்மை 5.அக்கறை 6.பற்று

**பிட்யூட்டரி சரபி**

* மூளையின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளது.

* பிட்யூட்டரியின் ஹார்மோன்கள் மற்ற சுரப்பிகளின் வளர்ச்சியை தூண்டக்கூடியது. வேதி தன்மையை நிலைப்படுத்தக்கூடியது.

* முதன்மை சுர்ப்பி - சுர்ப்பிகளின் தலைவன்

* குறைவாக சுரப்பதால் - குள்ளத்தன்மை

* அதிகமாக சுரப்பதால் - அசாதாரண வளர்ச்சி

**தைராய்டு சுரப்பி**

* குரல்வளைக்கு அருகில் உள்ளது.

* தைராக்சின் குறைவால் - குழந்தைகளுக்கு மீக்டோடீமா - கிரெட்டினிசம்

* தைராக்சின் பற்றாக்குறைவால் - முகம் வீங்கியும், பெரிய உதடும், அடிவயிறு பருத்தும், நாக்கு தடித்தும் காணப்படும்.

* தைராக்சின் அதிகமாக சுரப்பதால் - காய்டர்((முன் கழுத்து கழலை) வளர்ச்சி பிறழ்வடைந்த நிலை - கிரேவ் வியாதி, அமைதியிழந்த நிலை, உறக்கமின்மை, எரிச்சல் தோன்றும்.

* பாரா தைராய்டு சுரப்பி - சுண்ணாம்புச்சத்தை உருவாக்கும்.

* பாரா தைராய்டு சுரப்பி குறைவால் - எலும்புகளில் கடினத்தன்மையும், தசைகளில் வலிப்பு தன்மை (டெடானி நிலை) ஏற்படும்.

www.Padasalai.Net

**அட்ரினல் சுரப்பி**

* இரு சீறுநீரகங்களின் மேல்புறமாக அமைந்துள்ளது.

* அட்ரினலின் - சண்டை ஹார்மோன், அவசரகால ஹார்மோன்

* கல்லீரல், இரத்தத்தில் சர்க்கரை அளவை சுத்திகரிக்க தூண்டி அதிக உடல் சக்தியை வழங்குகிறது.

* ஆளுமைக் கோட்பாடுகள், கொள்கைகள் - 4

1. வகைப்பாட்டுக் கொள்கைகள்

மனிதன் உடல் அமைப்பைக் கொண்டு ஆளுமையை வேறுபடுத்துகிறது.

* ஹிப்போக்ரெட்ஸ், கிரெட்சுமர், ஷெல்டன்

2. அடிப்படைப் பண்பு கூறு கொள்கைகள்

ஆல்போர்ட், கேட்டல்

3. வகைப்பாடு - அடிப்படை பண்பு கூறு கொள்கை - ஜன்சங்க்

4. வளர்ச்சிக் கொள்கைகள் - உளப்பகுப்புக் கொள்கை - பிராய்டு

* தனிநபர் உளவியல் கொள்கை - ஆட்லர்

* பழி வாங்குதல் படலம் - முதலிடம்

* பகுப்பு உளவியல் கொள்கை - யூங்

* முதலிடம் - பாலூணர்வு

* ஹிபோக்ரெட்ஸ் வகைப்பாடு - இயல்பான உடல்நிலை - ஆளுமையின் இயல்பு

* அரிஸ்டாட்டிலின் மாணவர்

* கிரேக்க அறிவியல் தந்தை

* மனித உடலில் உற்பத்தியாகும் நீர் சுரத்தல் நடத்தை தொடர்பு

* சிரிமூஞ்சி, சிடுமூஞ்சி, அழு முஞ்சி, தூங்கு மூஞ்சி என மனிதர்களை வகைப்படுத்தியவர் - ஹிபோக்ரடீஸ்.

* சிரிமுக மனப்பான்மை - இயங்கும் இரத்தம்

* சிடுமூஞ்சி மனப்பான்மை - கருநிறம் பித்த நீர்

* அழுமூஞ்சி மனப்பான்மை - மஞ்சள் நிறப் பித்தநீர்

* தூங்கு மூஞ்சி மனப்பான்மை - உறங்கும் இரத்தம்

* க்ரெட்ச்மரின் வகைப்பாடு -உடல் கூறுகள்

* ஜெர்மனி உளவியலறிஞர்

* மனிநிலை குன்றியவர்களைச் சோதித்தார்.

* உருண்டையான உடலும் முகமும் உடையோர்

* திரண்ட பருத்த தசைகளும், எலும்புகளும் உடையோர் ஒல்லியாக ஒட்டிய மார்பும், குறுகிய தோள்களும் உடையோர் என உடல் அமைப்பின் அடிப்படையில் மனிதர்களை

3 பிரிவாக வகைப்படுத்தியவர் - க்ரெட்ச்மர்.

**ஷெல்டன் வகைப்பாடு - உடல் வகை**

* பருமனுடைய ,கட்டுடல், நீருடல்(ஒல்லி) என வகைப்படுத்தியவர் - ஷெல்டன்.

* ஆளுமைப் பண்புகளை 7 புள்ளி அளவுகோலில் குறிப்பிட்டார்.

* ஷெல்டன் கருத்துப்படி ஆப்ரஹாம் லிங்கனின் ஆளுமை 1.1.7

* ஷெல்டன் - 1. பருமன் உடல் 2. நீள் உடல் 3. கட்டுடல்.

www.Padasalai.Net